உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கிளை நிலையங்களைப் பற்றிய விவரங்களை நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ஆண்டிவேல்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியத்தில் புதுரோடு என்கிற கிராமத்தில் கால்நடை மருத்துவமனை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மருத்துவர்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சென்ற ஆண்டே நேரடியாக மனு கொடுத்துள்ளேன். இதுவரை மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆண்டிவேல், தனிக் கேள்வி போடுங்கள். அமைச்சர் அவர்கள் முத்தணம்பாளையத்தில் இருக்கிறார். நீங்கள் உங்கள் ஊருக்குக் கூப்பிடாதீர்கள்.

வினா எண் 36, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

36—

சாலை வளைவுகளை அகலப்படுத்துதல்

***48535–திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) ஏற்காடு தொகுதியில் ஆற்றுப்பாலத்திலிருந்து மாரமங்கலம் வரையுள்ள hair-pin வளைவுகளை (1, 3, 5, 19 மற்றும் 21) அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா.தி. இளையகண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் ஆற்றுப் பாலத்திலிருந்து மாரமங்கலம் வரை 12 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைக்கப் பட்டுள்ளது. பேருந்து வசதியும் அம்மா அவர்களுடைய ஆசியோடுதான் கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சாலைகள் வழியாக பள்ளி மாணவர்கள், கூலித் தொழிலாளர்கள் செல்கின்றனர். இந்தச் சாலையில் 1, 3, 5, 19 மற்றும் 21 எண்கள் உள்ளிட்ட hair-pin வளைவுகள் உள்ளன. இதில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சமீபகாலத்தில் லாரி மற்றும் பஸ் போகின்ற வழியை, முன்னும் பின்னுமாக எடுத்து, சமீபத்தில் லாரி விபத்துக்குள்ளானது. இதில் அருணாசலம் என்பவர் -- Arunachalam, Son of Vellaiyan என்பவர் –இறந்துவிட்டார். எனவே, பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி இந்த hair-pin வளைவுகளை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–இன்படி, மத்திய அரசுக்குப் பிரேரணை சமர்ப்பித்து, முன்னனுமதி பெற்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா.தி. இளையகண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே உள்ள மாரமங்கலம் என்பது ஓர் ஊராட்சி. இந்தப் பகுதியிலே, மாரமங்கலம், கோயிலூர், கேலையூர், பெலாக்காடு, செந்திட்டு, அரங்கம் என்று அங்கே பல பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பகுதியிலுள்ள பள்ளி மாணவர்களும், இந்தப் பகுதியிலுள்ள கூலித் தொழிலாளர்களும், 12 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த வளைவுகளை அகலப்படுத்திக் கொடுத்தால், அவர்கள் பஸ்ஸிலேயே செல்வதற்கு வழிவகை ஏற்படும். எனவே, இந்த வளைவுகளை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய சர்க்காருக்குப் பிரேரணை அனுப்பியிருக்கிறார்கள்; பார்க்கலாம்.

வினா எண் 37, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

37—

பால் குளிரூட்டும் கிளை நிலையம்

***37590—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, குலதீபமங்களம், மதுராகுச்சிப்பாளையம் கிராமத்தில் பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, குலதீபமங்களம், மதுராகுச்சிப்பாளையம் கிராமத்தில் பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த மூன்றாண்டு கால ஆட்சியில், தமிழகத்தில் அதிக அளவில் பால் உற்பத்தியாகி, வெண்மைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. முகையூர் தொகுதியிலும், அதிக அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதிக அளவில் பால் உற்பத்தி செய்திருக்கிறார்கள். விழுப்புரம் பால் மையத்திற்கு, சுமார் 70 கிலோ மீட்டர் தூரம் பால் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, பால், தயிர்ப் பால் ஆகிவிடும் நிலைமை அடிக்கடி ஏற்பட்டு, பால் உற்பத்தியாளர்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. குச்சிப்பாளையம் கிராமம், தென்பெண்ணை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. தண்ணீர் நன்றாகக் கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனவே, குச்சிப்பாளையம் கிராமத்தில், பால் குளிரூட்டும் கிளை நிலையம் ஒன்று அமைத்துத் தந்தால், அந்தப்